பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 85

07.09.2026

லஞ்சம் கேட்டு பெற்ற வணிக ஆய்வாளர், தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் கைது

புகார்தாரர் திரு.யுவராஜ், தான் புதிதாக கட்டிய வீட்டிற்கு ஒருமுனை மின்சாரம் வேண்டி உதவி பொறியாளர் அலுவலகம், கிழக்கு அரக்கோணம் மின் பகிர்மான கழக அலுவலகம், ராணிப்பேட்டை மாவட்டத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல்நடவடிக்கை எடுக்க திரு.சுந்தரமூர்த்தி, வணிக ஆய்வாளர், உதவி பொறியாளர் அலுவலகம், கிழக்கு அரக்கோணம் மின் பகிர்மான கழக அலுவலகம், ராணிப்பேட்டை மாவட்டம் அவர்கள் தனக்கு லஞ்சமாக ரூ.2,000/- கொடுக்க வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை ராணிப்பேட்டை பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 07.09.2026, வழக்கு பதிவு செய்யப்பட்டு, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.சுந்தரமூர்த்தி, வணிக ஆய்வாளர் அவர்கள் ரூ.2,000/- லஞ்ச பணத்தை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

PRESS RELEASE – 85
07.09.2026

COMMERCIAL INSPECTOR, TNPDCL, ARRESTED FOR BRIBE

The complainant Tr.Yuvaraj, had applied for new single phase connection for his newly constructed house at the office of the Assistant Enginer, O&M, Rural, East Arakkonam, TNPDCL, Ranipet District. Tr.Sundaramoorthy, Commercial Inspector, office of the Assistant Enginer, O&M, Rural, East Arakkonam, TNPDCL, Ranipet District demanded Rs.2,000/- as bribe from the complainant for processing his application. Unwilling to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Ranipet detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized today (07.09.2026). During trap proceedings, Tr.Sundaramoorthy, Commercial Inspector, received bribe amount of Rs. 2,000/- from the complainant. The accused was arrested and sent to judicial custody.